# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை – 02

**தமிழ் மொழியும் இலக்கியமும்** | **க.பொ.த. சாதாரணதரம் 2024 (2023)**

## பகுதி 1

**கவனிக்க:**

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

### தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1. "நன்னுதல் வியக்கும் நலத்தோரியார்….." - இங்கு **நுதல்** என்பது

1. கோபம் 2. நெற்றி 3. பொட்டு 4. திலகம்

2. "மாக மடங்கலும் மால்விடையும்.." இங்கு **மடங்கல்** என்பது

1. சிங்கம் 2. யானை 3. எருது 4. மலை

3. "நரகம் புகினும் எள்ளேன்.." இங்கு **நரகம்** என்பதன் எதிர்க்கருத்து

1.சுவர்க்கம் 2.பாதாளம் 3. ஆகாயம் 4. பூலோகம்

4. "தனித்து நின்றும் சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்". இங்கு **சத்தியம்** என்பதன் எதிர்க்கருத்து

1.வாய்மை 2. உண்மை 3. அசத்தியம் 4. நேர்மை

5. "சில நிபுணர்கள் பார்த்த வாக்கிலேயே சொல்லிவிடுவார்களாம்" இங்கு **நிபுணன்** என்பதன் எதிர்ப்பாற்சொல்

1.நிபுணை 2. நிபுணள் 3. நிபுணிச்சி 4. நிபுளை

### பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. பின்வருவனவற்றுள் தொடர்பற்ற சொற்களின் இணைவு

1. குதிரை – குண்டு 2. யானை – களிறு

3. புலி – போத்து 4. குரங்கு – மந்தி



kalvi.lk

7. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி

1. அமர், சமர், போர்

2. மகவு, சேய், தாய்

3. புனல், , சலம், அப்பு

4. ஆவல், விருப்பம், அவா

8. மீடியாக்கள் (Media) உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுகின்றன. இங்கு **'மீடியா'** என்பதன் கலைச்சொல் வடிவம்

1. ஆர்வம் 2. பத்திரிகை 3. தேர்தல் 4. ஊடகம்

9. இளமை குறித்த "**பிள்ளை**" என்ற மரபுப் பெயருக்குப் பொருத்தமற்றது

1. அணில் 2. கீரி 3. காக்கை 4. கிளி

10."பெண்களுக்கு தம்பதியே பெரும் தெய்வம்."

"பதியிழந்தனம் பாலனை இழந்தனம்" இவ்விரு அடிகளிலும் பதி என்ற சொல் உணர்த்தும் பொருள் முறையே

1. கணவன், தலைவன் 2. நாடு, கணவன்
3. கணவன், நாடு 4. தலைவன், கணவன்

11. பேரும் புகழும் என்ற இணைமொழியின் பொருள் தரும் வேறோர் இணைமொழி

1. சீரும் சிறப்பும் 2. ஊரும் பேரும் 3. பட்டம் பதவி 4. ஈடும் எடுப்பும்

12. சொற்களை அகரவரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல்

1. அரிச்சுவடி 2. பாலர் பாடம் 3. ஆவணம் 4. அகராதி

13. சரசர என விழும் பால்,முறுகக் காய்ச்சிபெரிய கிளாசில் ஊற்றித் தருவா. இங்கு சரசர என்பது

1. இரட்டைக் கிளவி 2. இணைமொழி

3. அடுக்கிடுக்குத்தொடர் 4. அடுக்குத்தொடர்

14. வெரசா, மடுவம் என்பவை

1. கிழக்குப்பிரதேச வழக்கு 2. வடக்குப்பிரதேச வழக்கு

3. மேற்குப்பிரதேச வழக்கு 4. மலையகப்பிரதேச வழக்கு

15. "பக்கம் சாராது நடுவு நிலைமையோடு காரியமாற்றலை விளக்கப் பொருத்தமான உவமைத்தொடர்

1. புனல் ஓடும் வழிப்புல் சாய்தல் போல

2. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

3. தாரகை நடுவண் தண்மதி போல

4. சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல

16. கொண்டல், கார், முகில் எனப் பலபொருட்களை குறிக்கும் ஒரு சொல்

1.வானம் 2. கண்டம் 3. மழை 4. மேகம்



kalvi.lk

17. கேடு விளைந்த பின்னர் அதனைத்தடுக்க முயல்வது பயனற்றது என்னும் பொருள் தரும் பழமொழி

1. கண் கெட்டபின்னர் சூரிய நமஸ்காரம்

2. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது

3. ஊர் வாயை மூட உலைமூடி இல்லை

4. வெள்ளம் வரமுன்னர் அணைகட்ட வேண்டும்

18. அடிகள் தோறும் செய்யுட்சீர்களின் அல்லது வாக்கியத்தில் சொற்களில் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

1. எதுகை 2. மோனை 3. உவமை 4. அந்தாதி

19. அவள் நல்லுள்ளம் கொண்டவள்.
அவள் தவறு செய்யமாட்டாள்.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்

1. ஆனால் 2. ஆகையால் 3. ஆயினும் 4. எனினும்

20. பின்வருவனவற்றுள் அச்சக்குறிப்பை உணர்த்துவது

1. துண்ணென 2. திடீரென 3. படாரென 4. டக்கென

பின்வருவனவற்றுள் ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றுள் பகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. கோபம் 2. சபலம் 3. சம்பல் 4. கொள்பவர்

22. இறந்தான் என்பதை இறைவனடி எய்தினான் என்பது

1. குழூஉக்குறி 2. இடக்கரடக்கல் 3. மங்கலம் 4. மரூஉ

23. "கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய்" - இங்கு கையாளப்பட்டுள்ள அணி

1. உவமை அணி 2. தற்குறிப்பேற்ற அணி

3. உயர்வுநவிற்சி அணி 4. உருவக அணி

24. பின்வருவனவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரமாக அமைவது

1. நாற்று 2. படகு 3. மாடு 4. மார்பு

25. நாய் வீட்டுக்கு முன்னே இருக்கிறது. இங்கு இடம் பெற்றுள்ள நான்காம் வேற்றுமைப் பொருள்

1.எல்லைப்பொருள் 2. காலக்குறிப்பு 3. அனுபவப்பேறு 4. வீதம்வீதாசாரம்

26. இயல்புப்புணர்ச்சி இடம் பெறுவது

1. மரவேர் 2. மண்ணரிப்பு 3. ஆணழகன் 4. பொற்குடம்

27. பின்வருவனவற்றுள் பெயரடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்

1.அறிவு 2. கல்வி 3. கேள்வி 4. பெண்ணியம்

28. அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதியைத் தெரிவு செய்க

1. சீலம், தாலம், நீலம், மாயம் 2. கட்டில், கீரி, குயில், கோயில்

3. குருத்து, பருந்து, விருந்து, மருந்து 4. ஞாலம், காடு, நாடு, பாடு



kalvi.lk

**பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29.

1.பெயர்ப்பகாப்பதங்கள் : மண், நீர், தீ, கல்

2.வினைப்பகாப்பதங்கள் : நட, வா, போ, சிரி

3.இடைப்பகாப்பதங்கள் : ஐ, பிற, ஆல், ஒப்ப

4.உரிப்பகாப்பதங்கள்: சால, உறு, நனி, இனி

30.

1. 3ஆம் வேற்றுமை : மூலம், காரணம், கலப்புறு, அடைமொழி
2. 4ஆம் வேற்றுமை: தகுதி, முறை, நட்பு, பகை
3. 5ஆம் வேற்றுமை : நீங்கல், எல்லை, ஒப்பு, ஏது
4. 6ஆம் வேற்றுமை : உடைய, காட்டிலும், கிழமை

**• புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. தன்னால் நண்பனுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காக உரிய தொகையை …..……....…………… வழங்கினான்.

1. கையூட்டு 2. உதவி 3. நட்டஈடு 4. நிவாரணம்

32. அரசர் எழுந்தருளும் போது அவர்களது சிறப்பு, வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுவது ………………… ஆகும்

1. கட்டியம் 2. வாழ்த்துப்பா 3. அறம்பாடுதல் 4. வசைபாடுதல்

33. பாடசாலை முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் …………….. இடம்பெற்றது.

1. ஆரம்பவிழா 2. வரவேற்புவிழா 3. வித்தியாரம்ப விழா 4. கால்கோள் விழா

34. சிறுவர் துஸ்பிரயோகங்களை ஒழிக்க வேண்டி மக்கள் ………………… மேற்கொண்டனர்.

1.ஆர்ப்பாட்டம் 2.ஊரடங்குச்சட்டம் 3.பிரசாரம் 4.பிரகடனம்

## வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. நீயும் என்னுடன் வாழ்ந்தால் தான் அவர் அதை நம்பிக்கையுடன் ..................................................

1. ஒப்படைப்பார் 2. ஒப்படைத்தனர்
3. ஒப்படைத்தார் 4. ஒப்படைத்தார்கள்

36. அரசன் எவ்வழி செல்கின்றானோ குடிகளும் ...............................................

1. அங்ஙனமே செல்வர் 2. எவ்வழியே செல்வர்
3. அவ்வழியே செல்வர் 4. அவ்வண்ணமே செல்வர்



kalvi.lk

**பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

காலைப்பொழுதினில் விழித்துமே – தன்
கடமை யாவும் முடித்துமே
மேலைப் பரம்பொருள் சேவடி – மிக்க
வேட்கையோடும் பணிந் தேத்துவான்

கையினில் மண்வெட்டி கொண்டுமே – உயிர்
காதலி யானவள் பின்வர
வெய்யில் எழுந்திட முன்பவன் - தன்
விளைநிலம் நாடி புகுவனே!

ஏழை எளியவர் வாழவே – அன்பு
என்றுஞ் சொரிந்திடும் ஈகையான்
கூழெனினும் பிறர்க் கீந்தலால் - தான்
குடித்தறியா குணக்குன்றன்

37. இப் பாடலினூடாக கவிஞர் குறிப்பிடும் தொழில்

1. கோயில் தொண்டு
2. உழவுத்தொழில்
3. கடற்றொழில்
4. மரம் வெட்டுதல்

38. இங்கு குணக்குன்று என்பது

1. உவமை
2. உருவகம்
3. தற்குறிப்பேற்றம்
4. உயர்வுநவிற்சி

39. ஏழைஎளியவர் என்பது

1. இரட்டைக்கிளவி
2. அடுக்குத்தொடர்
3. அடுக்கிடுக்குத்தொடர்
4. இணைமொழி

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.

(ஆ) அந்த நகர் புறச்சேரியில் மாதரி தந்த அடைக்கலத்தால் தனி வீட்டில் சமையல் நடக்கிறது.

(ஆ) வழி நெடுகிலும் உள்ள வருத்தத்தையும் ஏற்று பலகாத தூரம் நடந்து மதுரை வந்து சேர்ந்தனர்.

(இ) கோவலனும் கண்ணகியும் பூம்புகாரை விட்டுப் புறப்பட்டனர்.

(ஈ) உண்டு முடித்து ஓய்வாக அமர்ந்ததும்அவள் வெற்றிலை மடித்துக் கொடுக்கிறாள்.

(உ) பின் கோவலனை அழைத்து அமரச் செய்து அமுதம் படைக்கிறாள் கண்ணகி

1. அ, ஈ, உ, ஆ, இ
2. இ, ஆ, அ, உ, ஈ
3. இ, அ, உ, ஈ, ஆ
4. இ, அ, ஆ, உ, ஈ



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page